

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம (23.2.2026) முகாம் அலுவலகத்தில், புதுச்சேரி மாற்றுக் கட்சியைச் சேர்ந்த பிரமுகர் என். ரங்கன் மற்றும் அவரது மகள் சத்யா ஆகியோர் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.
உடன் புதுச்சேரி கழக மாநில அமைப்பாளர் சிவா உள்ளார்.

‘திராவிடப் பெண்கள் பவர் எஞ்சின்’ முன்பு, உங்களின் ‘டப்பா எஞ்சின்’ தாக்குப் பிடிக்காது!

# கழகத்தின் மகளிர் படை, மாநிலம் முழுவதும் களமிறங்கி விட்டது!

## அதற்குச் சாட்சியான காட்சி இதோ!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, பிப்.25–**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:**



திராவிட மாடல் அரசின் 5 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை: முதலில் கொச்சைப்படுத்தினார்கள்; அது ‘பூமராங்’ ஆனதால் தற்போது உரிமை கொண்டாடுகிறார்கள்!

அ.தி.மு.க.வின் அழுத்தமே நாம் 1.31 கோடி குடும்பத் தலைவிகளுக்கு 5 ஆயிரம் ரூபாயை உரிமைத்தொகையாக வழங்கக் காரணம் என்ற அரிய கண்டுபிடிப்பை உதிர்த்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர்.

பழனிசாமி அவர்களே, உங்கள் அழுத்தம் காரணமல்ல. “உங்கள் டெல்லி ஓனர்கள் தேர்தலைக் காரணம் காட்டி உரிமைத் தொகையைத் தடுத்து நிறுத்துவார்கள் என்ற சூழ்ச்சி தான் காரணம்!” இதனைத் தெளிவாக விளக்கித்தான் எனது சகோதரிகளின் கணக்கில் பணத்தை அட்வான்சாக வரவு வைத்திருக்கிறேன்.

பரவாயில்லை, நீங்கள் உரிமை கொண்டாடுகிறீர்கள் என்பதில் இருந்தே ‘திராவிட மாடல்’ சத்தமில்லாமல் நடத்திய surgical strike உங்கள் உறக்கத்தைக் கெடுத்து, இப்படி புலம்பும் அளவுக்கு பெரிய ‘ஹிட்’ அடித்துள்ளது எனப் புரிந்துகொள்கிறேன்.

Copy, paste அரசியல் என்பது காலங்காலமாக அ.தி.மு.க.வின் வாடிக்கை என்பதைத் தமிழ்நாட்டில் அனைவரும் அறிவார்கள். அதனால், புதுசா ஏதாவது சொல்லுங்க!

விடியல் பயணம், புதுமைப்பெண், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை என ‘திராவிட மாடல்’ அரசின் மகளிருக்கான திட்டங்களை இல்லந்தோறும் எடுத்துக்கூற கழகத்தின் மகளிர் படை மாநிலம் முழுவதும் களமிறங்கி விட்டது. எங்கள் #DMKWomenPowerEngine முன் உங்க டப்பா எஞ்சின் தாக்குப்பிடிக்காது!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.








